**தலைப்பு 6 – அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---------------------------------------------------

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம்

(அ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) ஆணைக்குழுவினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை என நான் தெரிவிக்கின்றேன்

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் பிரகாரம் வேறு வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக சேகரிக்கப்பட்ட ரூபா 6,995,892 நிதிக்கூற்றுக்களில் திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதியின் பகுதியொன்றாக ஏனைய பெறுவனவுகளாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதில் ரூபா 5,705,722 குறைத்து ரூபா 1,290,170 வரை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏனைய பெறுவனவுகள் ரூபா 6,995,892 ஆக இருந்த போதிலும் அறிக்கையிடும் போது ரூபா 1,290,170 என பதிவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த பொழிப்பறிக்கையின் பிரகாரம் திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதி பெறுமதி ரூபா 308,970,000 ஆக இருந்த போதிலும் அது ரூபா 1,812,780 கூடுதலாக ரூபா 310,782,720 என குறிப்பிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தவறுதலாக வேறு மூலத்திலிருந்தான பெறுவனவு மற்றும் திறைசேரி கட்டுநிதி மொத்தமாக காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | மேலே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றில் கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 740,193 ஆக இருந்த போதிலும் அது நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 3,152,809 என்ற பாதகமான மீதி ஒன்றாக காட்டப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன் |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 704,601,823 என கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அதில் ரூபா 346,259,552 குறைந்து ரூபா 358,342,271 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | அலுவலகக் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 541,863,871 ஆக இருந்த போதிலும் நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அது 264,169,319 என காண்பிக்கப்பட்டிருந்தது | - மேற்படி - | அலுவலகக் கட்டிடத்தின் சரியான பெறுமதியான ரூபா 541,863,871 என மதிப்பீடு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | போக்குவரத்து உபகரணங்களின் பெறுமதியாக ரூபா 523,690 நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மொத்த வாகனங்களின் பெறுமதி ரூபா 68,565,000 ஆக இருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | போக்குவரத்து உபகரணங்களின் கீழ் அறிக்கையிடப்பட வேண்டிய சரியான பெறுமதியான ரூபா 69,088,690 என சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | நிதிக் குத்தகை முறைமை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட 4 மோட்டார் வாகனங்களுக்குரிய ரூபா 958,761 ஆன 2 தவணைகள் 2018 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. அத் தவணைகளின் பெறுமதி நிதி நிலைமை தொடர்பான கூற்றில் குத்தகை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | அந்த 04 வாகனங்களுக்குரிய மொத்த பெறுமதி நிதிக் குத்தகையின் கீழ் காண்பிப்பதற்குரிய மென்பொருளில் (CIGAS) வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 231,980 ஆன கடன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்விபரம் அங்கத்தவர்களுடன் கடன் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அங்கத்தவர் கடன் பதிவேடு நாளதுவரையாக்கப்படல் வேண்டும். | கடன் மீதியை கணக்கீடு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 138,836 ஆன கடன் மீதி 2018 சனவரி 01 ஆந் திகதி ரூபா 117,008 என அங்கத்தவர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | கடன் மீதிகள் சரியாக பதிவு செய்யப்படல் வேண்டும். | தவறுதலாக மீதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (எ) | 2018 ஆகஸ்ட் மாதத்தின் போது உயர்கல்வி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 188,495 ஆன கடன் மீதி 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.6 பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தீர்வு செய்யுமாறு உரிய அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஏ) | கடன்பட்டோர் / கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்வு செய்யும் பதிவேட்டின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ரூபா 175,261 ஆன கடன் மீதி தீர்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அக்கடன் தொகை அறவிடுவதற்கு உள்ள கடன் மீதிகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | முறைப்படி பதிவேடு நாளதுவரையாக்கப்பட வேண்டும். | ஏற்பட்ட தவறினை திருத்துவதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த கணக்கு பொழிப்பின் பிரகாரம் வருமானமல்லாத பெறுவனவு ரூபா 316,228,740 ஆக இருந்தது. எனினும், அது ரூபா 5,446,020 குறைத்து ரூபா 310,782,740 என குறிப்பிடப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இடம்பெற்ற அறிக்கையிடல் தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) வைப்புக்கள் கொடுப்பனவு ரூபா 10,876,218 செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டமை காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இடம்பெற்ற அறிக்கையிடல் தவறினை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) முற்பண பெறுவனவாக ரூபா 8,220,827 தொகை முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் உருவான காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இடம்பெற்ற அறிக்கையிடல் தவறினை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) முற்பணக் கொடுப்பனவானது ரூபா 14,765,624 முதலீட்டு செயற்பாடுகளின் செலவிடப்பட்ட காசு, பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இடம்பெற்ற அறிக்கையிடல் தவறினை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காசு மற்றும் காசிற்கு சமமானவற்றின் பெறுமதி காண்பிக்கப்படாதிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அம்மீதி ரூபா 15,175,362 ஆன | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இடம்பெற்ற அறிக்கையிடல் தவறினை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | பாதகமான மீதியாக குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | 2018 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 243,892 ஆன ஆரம்ப காசு மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கட்டுநிதிக் கணக்கின் பிரகாரம் 2018 சனவரி 01 இல் உள்ளவாறு ஆரம்ப காசு மீதியொன்று காணப்படவில்லை. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | தாமதம் காரணமாக ஏற்பட்டிருந்தது. |

### 1.6.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

---------------------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | பிரமான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (i) | இலங்கை சாநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | நிதிப் பிரமாணம் 1647 | வாகனங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகனம் தொடர்பாக வேறாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அடுத்த வருடத்தில் இருந்து கணிப்பீடு மேற்கொள்ளப்படும் |
| (ii) | பொது நிர்வாகச் சுற்றிக்கை | | | |
| | 2016 மார்ச் 29 ஆந் திகதிய 30'2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 மற்றும் 3.3 பந்திகள் | எரிபொருள் எரிவு தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆண்டின் இறுதியில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் குறிப்புக்களை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. |
| (iii) | அரச நிதிச் சுற்றறிக்கை | | | |

------------------------------------

| | | | |
|---|---|---|---|
| • 2016 திசெம்பர் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 பந்தி | 2017 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் 11 மாதங்கள் அளவில் தாமதித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் அறிக்கையும் உரிய திகதியில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் சகல சொத்துக்களும் இனங்காணப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அலுவலகத்தை புதிய கட்டிடத்திற்கு கொண்டு சென்ற காரணத்தினால் குறித்த பொருள் வெவ்வேறு பிரிவுகளில் காணப்பட்டதுடன் அவற்றை மீண்டும் ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு காலம் எடுத்ததால் அறிக்கை வழங்குதல் தாமதிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் அறிக்கை தயாரித்தல் இறுதிக் கட்டத்தில் உள்ளது. |
| • 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 12 ஆம் பந்தி | வாகன கைதவிர்ப்புக்குரிய அறிக்கை 2018 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு - சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 செலவின விடயங்களுக்காக மிகை நிதி மேற்கொள்ளப்பட்டதால் நிதிஏற்பாடுகளில் செலவிடப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் ஒதுக்கீடுகளில் 19 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையான அளவினைக் கொண்டிருந்தது. மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | இயந்திர உபகரணங்களில் திருத்தங்கள் ஏற்படாமை, திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் இரத்துச் செய்யப்பட்டமை, போதியளவு கட்டுநிதி கிடைக்காமை காரணமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வாய்வு

### 3.1 திட்டமிடல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியினர், வருடாந்த கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம் உள்ளக கணக்காய்வுத் திட்டம், செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் என்பன செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அடையப்பட்ட செயலாற்றல் ஒப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த தகவல்களை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு சிரமமாக இருந்தது. |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் 2018 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும் செயற்பாடுகள் தொடர்பாக தகவல் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் அச்செயலாற்றலை ஒப்பீடு செய்வதற்கு போதியளவு தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உள்ளடக்கப்பட வேண்டிய செயலாற்றல் ஒப்பீடு செய்து சமர்ப்பிக்கப்பட வேண்டும் | இல்லை<br>(பதிலுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது) |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) வாகனங்களில் பொறுப்பு மாறும் போது இருப்பு பதிவேடுகளை கையளிக்கவோ அல்லது பொறுப்பு கையேற்றல் தொடர்பான தகவல்கள் வாகன சம்பவப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன சம்பவப் பதிவேடுகளை நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சம்பவ பதிவேடுகளில் பதிவு செய்தல் தாமதமாக இடம்பெற்றுள்ளது. எதிர் காலத்தில் சம்பவப் பதிவேட்டுக் குறிப்புக்கள் சீராக்கம் செய்யப்படும். |
| (ஆ) தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் ஆணைக்குழுவினால் நிதி குத்தகை முறைமையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்காக வேறாக பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். | பதிவேடொன்றை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆணைக்குழுவின் புதிய கட்டிடம் 2018 பெப்ரவரி மாதத்தின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் இக்கட்டிடத்திற்கான இணக்கச் சான்றிதழை 2019 மே 21 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | இணக்கச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தீ பாதுகாப்பு முறைமையில் இடம் பெற வேண்டிய மாற்றங்களினால் இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்வது தாமதமாகியது. |